
# ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்



மணவாள மாமுனிகள்

"மன்னுயிர்காளிங்கே மணவாள மாமுனிவன்
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை -உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானுவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்".

## ஸ்வாமியின் திருவவதாரம்

உபய விபூதி நாதனான எம்பெருமானுடைய லீலா விபூதியாகிய இவ்வுலகம் ஞானிகளால் இருள்தருமா ஞாலமெனப்பட்டது. அத்தகைய இருளைப் போக்குவதற்கு **"புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாய ச, ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமானுநுஜ திவாகர:"** **என்றபடி "எம்பெருமானாராகிய விலக்ஷண சூரியன்" இவ்வுலகில் திருவவதரித்து "கடலளவாய திசையெட்டினுள்ளும்" மற்றும் தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும்"என்னும் பாசுரத்தின்படி, ஸம்ஸ்க்ருத வேத பாஹ்ய குத்ருஷ்டிகளையெல்லாம், தம் சூக்தி சரங்களாலே, நிரஸித்தருளி, "மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்னும்படியாக ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் ப்ரவர்த்திப்பித்தருளி, திவ்ய தேசங்களையும் உத்தரிப்பித்து, ஒருவாறு அவதார க்ருத்யத்தைத் தலைக்கட்டிக் கொண்டு, சுடரொளிச் சோதிக்கு எழுந்தருளியப்பின், சில காலம் கடந்த பிறகு, மீண்டும் வேதபாஹ்ய குத்ருஷ்டிகள் தலையெடுத்து இவ்வுலகைநலிய, அந்த எம்பெருமானார் தாமே மீண்டும், வைகுண்டநாதனுடைய திருவாணையினால், இந்நிலவுலகில் ஆழ்வார் திருநகரியில் திருநாவீறுடைய பிரான் தாஸரண்ணர் என்கிற மஹாசார்யனை தந்தையாகவுகந்து அவருடைய திருக்குமாரராய் (கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான) ஸாதாரண வருடத்தில், ஐப்பசி மாதத்தில் திருமூலநக்ஷத்திரத்தில் திருவவதரித்து மணவாளமாமுனிகளென்கிற திருநாமத்துடனே விளங்கி, முன் அவதாரத்திற்**

செய்தருளின மஹோபகாரங்களிற் காட்டிலும்,
பன்மடங்கு அதிசயித்த சேமங்களை செய்தருளி,
இவ்விருள் தருமா ஞாலத்தை, தெருள் தருமா
ஞாலமாக திருத்தி பணிகொண்டார்.
அவர் திருவவதார நன்னாளின் சிறப்பை,

“செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்துடுநாள்
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்துடுநாள்
மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறு ஞானியர்சேரேதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில் சூழ்குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர் மேனியரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமிழ் சீர்மணவாளமுனிப்பரனவதாரம் செயுநாள்
அழகுதிகழ்ந்திடுமைப்பசியில் திருமூலமதெனு நாளே”
என்று பாசுரமாகவும்,
“யந்மூலமாச்வயுஜமாஸி யதவதரண மூலம்”
இத்யாதி ஸ்லோகங்களாகவும் பின்புள்ள முதலிகள்
அநுஸந்தித்தார்கள்.
இங்ஙனே உலகுக்கெல்லாம் ஓருயிராகத்
திருவவதரித்தருளின திவ்ய மூர்த்திக்கு,
ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமத்தைச் சாத்த விரும்பிய
பெரியார் அழகிய மணவாளன் என்று திருபெயரிட்டனர்.
அழகிய மணவாள நாயனார் என்று சிறப்புத்
திருநாமமாக வழங்கி வந்தது.
பின் திருவாய்மொழிப்பிள்ளை என்கிற ஆச்சார்யரை
ஆஸ்ரயித்து, ஸகல விசேஷார்த்த நிதியையும்
அவரிடமிருந்து பெற்றார். திருவாய்மொழிப்பிள்ளை
ஒருநாள் எம்பெருமானாருடைய குணானுபவம்
பண்ணிக் கொண்டிருக்கையில், ஆழ்வார் திருநகரியில் ,
இராமானுசர்க்கு ஒரு தனிக்கோயில் அமைக்க
வேணுமென்னு திருவுள்ளம் பற்றி, சிஷ்யர்களுக்கு
நியமித்து, உடையவர் ஸந்நிதியையும், அதைச் சுற்றி
ஸ்ரீராமனுஜ சதுர்வேதிமங்கலம் என்கிற திருவீதியையும்

ப்ரதிஷ்டிப்பித்து நற்செல்வம் அனைத்தையும் நாயனார்க்கு அதீனமாக்கி, பின் நாயனாரின் கைங்கர்யத்தைப் போர உகந்து, அவருக்கு "யதீந்திரப்ரவணர்" என்று திருநாமம் வழங்கினார். பின் ஆச்சார்ய நியமனமாக, நாயனார் யதிராஜ விம்ஷதி அருளிச் செய்தார். பின் ஆஸ்ரம ஸ்வீகாரம் செய்து, நம்பெருமாளை மங்களாசாசனம் செய்யச் சென்று, நின்றவளவிலே, பெருமாளும் இவரை ஆதரித்தருளி, தம்முடைய திருநாமத்தையே இவர்க்கு ப்ரஸாத்தித்தருளி, அழகிய மணவாள மாமுனிகள் என்றிட்டார்.மாமுனி தன் சிஷ்ய கோடிகளுடன், திவ்ய தேச யாத்திரை செய்து, ஆங்காங்கு அடிபணிந்தார்க்கு அர்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருளி, எல்லோரையும் கடாக்ஷித்து, அரங்கத்தரவினணையான் கோல மணியாரமும், முத்துத் தாமமும் முடவில்லதோர் எழில், நீலமேனியின் ஸேவையை நெடுங்காலம் விட்டு பிரிந்திருக்கமாட்டாமல் விரைந்து திருவரங்கம் பெரிய கோயிலேற வந்து சேர்ந்தாராயிற்று.

## அரங்கேசன் திருமுன்பே ஈடு அருளிச் செய்தல்

மணவாளமாமுனிகள் இங்ஙனம் அப்ரதிம வைபவம் பொலிய சிஷ்யஸ்ம்பத்துடனே  வாழ்ந்தருளுங் காலத்திலே, ஒருநாள் ஸ்ரீரங்கநாதன் மாமுனிகளுக்கு அருளப்பாடிட்டு, ஜீயரே நாளை முதலாக நம்முடைய பெரிய திருமனண்டபத்திலே, நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை, ஈடு முப்பத்தாறாயிரம் முதலான வியாக்கியானங்களுடனே ப்ரவசனம் செய்து போரீர் என்று நியமனம் சாதிக்க, மாமுனிகள் மஹாப்ரஸாதமென்று உகந்து, அப்படியே மறுநாள்

தொடங்கி, கங்கா ப்ரவாஹமோ அல்லது கங்கையிற் புனிதமாகிய காவிரி பெருக்கோ என்னலாம்படியாக, மிக அற்புதமாய் தம்முடைய விசதவாக்சிகாமணித்வத்தை, நன்கு நிலைநாட்டிக் கொண்டு ப்ரவசனம் செய்தருளத் தொடங்கினார்.

அப்போது பெருமாளும், நாச்சிமாருடனே கூட திவ்ய சிம்மாஸனத்திலமர்ந்து, அச்சேர்த்தியை அநுபவிக்கிற அயர்வறுமமரர்களான திருவனந்தாழ்வான், பெரிய திருவடி, ஸ்ரீஸேனாபதியாழ்வானாகிற நித்ய ஸூரிகளோடும், நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் பதின்மரோடும், அணியரங்கன் திருமுற்றத்தாரோடுங் கூடப் பேரோலக்கமாகவிருந்து

“ரங்கீ வத்ஸர மேகமேவம் அச்ருணோத்”

என்னும்படியே, ஒரு வருடகாலமும், ப்ரம்ஹோத்ஸவாதிகள் உள்பட, ஸகல உத்ஸவங்களையும் நிறுத்தி, திருச்செவிசார்த்தும்படி ஆயிற்று. இங்ஙனம், ஒரு வருட காலம் இடையூறு ஒன்றுமின்றி, இனிதாக நடைப்பெற்றுக் காலக்ஷேபம் தலைக்கட்டியருளும் நாளொன்று நேர்ந்தது. அன்று அழகிய மணவாளன் திருவுள்ளத்திலே ஒரு தோற்றம் பிறந்தது. அதாவது - எம்பெருமான் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகச் செய்தருளின, விபவாவதாரங்களுள், இராமபிரானாக திருவவதரித்த காலத்தில், விஸ்வாமித்திரருடைய சரித்திரங்களை உணராமல், இவர் ஒரு மஹரிஷி என்று ப்ரதிபத்தி மாத்ரமே கொன்டு, அவர்க்கு சேவகனாய் நின்றான். பின் அம்முனிவருடைய சரிதையை கேட்டபின், இவரையோ நாம் ஆச்சார்யனாகக் கொள்ளப் பெற்றது என்று திருவுள்ளக் குறையுற்றிருந்தான் போலும். பிறகு க்ருஷ்ணாவதாரத்தில், ஸாந்தீபநீ பக்கலிலே, சரணம் புகுந்து, வித்யாக்ரஹணம் பண்ணினான். அங்கு

குருதக்ஷிணை ஸமர்ப்பிக்க விரும்பி, என்ன அபேக்ஷிதம், என்று அவரைக் கேட்டபோது,

ஓது வாய்மையும் உவனிய பிறப்பும்
உனக்கு முன் தந்த அந்தணனொருவன்
காதலென் மகன் புகலிடங் காணேன்
கண்டு நீ தருவாய் எனக்கென்று
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய
குறை முடித்து அவன் சிறுவனைக் கொடுத்தாய் -
(பெரிய திருமொழி 5-8-7)

என்னும் படியாக, ஸாந்தீபநி, என்றைக்கோ மறிகடல்வாய் மாண்டுப் போன தன் மகனை, கொணர்ந்து கொடுக்குமாறு வேண்டினார். இங்ஙனம், லௌகீகமான பலனை விரும்புகின்ற இவரை, ஆச்சார்யனாக கொள்ளப் பெற்றோமே, என்று அவரிடத்திலும், எம்பெருமானது நெஞ்சம் அப்ரீதி கொண்டது போலும்.

ஆக, விபவவதாரங்களிலெல்லாம், தான் தலை மடுத்த இடமெல்லாம், தடுமாறிப் போகவே, அக்குறையெல்லாம் தீர, இப்போது ஸதாசார்ய பேறு நமக்கு வாய்த்தது, மஹத்தான விஷேசமே, இங்ஙனம் நமக்கு நேர்ந்த மஹாபாக்யம் நீடுழிகாலம் இந்நிலவுலகில் நிலவும்படி, இந்த ஸதாச்சார்ய விஷயத்திலே, ஒரு கிஞ்சித்காரம் செய்யப் பெற்றோமாக வேணும். இந்த ஆச்சார்ய சிகாமணிக்கு ஒரு சிறந்த தனியனிட்டு, அதை திருவோலக்கத்திலே விண்ணப்பஞ் செய்து, அது தனக்கு உலகம் நிறைந்த புகழுண்டாகும்படி செய்வோம் என்கிற திருவுள்ளம் உண்டாயிற்று.

## ஸ்ரீ சைலேசத் திருமந்திரம் திருவவதரித்தல்

**அன்றையக் காலக்ஷேப கோஷ்டியில்,**
**"அவா விலந்தாதி யிப்பத்தறிந்தார் பிறந்தார் உயர்ந்தே"**
**என்னுமளவாக வ்யாக்யானத்தை நிர்வஹித்தருளி, மேலே சீரும், சிறப்பும் நடைபெறுத்த வேண்டிய அவஸரம் ப்ராப்தமாகையில்**
**அழகிய மணவாளன் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக குமாரனான கோலம் பூண்டு, கனவேகமாகக் கோஷ்டியிடையிலே வந்து, அவரவர்கள் விலக்கினதையும் லக்ஷியம் பண்ணாமலே புகுந்து கைக்கூப்பி நின்று,**




**"ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்**
**யதீந்திர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்"**
**என்கிற தனியனை விண்ணப்பஞ் செய்து மறைய, இவ்வதிசயத்தை நோக்கி, அனைவரும் வியந்தனர்.**

**இங்ஙனம் தெய்வ வாக்காகத் திருவவதரித்ததாய், சிறந்த மந்திரமென்று போற்றப்படுமானதான இத்தனியனை, பகவதாஜ்ஞையின் படி சிஷ்ய வர்க்கங்கள் பட்டோலை கொண்டு,மஞ்சட்காப்பு சாத்தி,**

*அரவணைத்துயிலும் கடல் நிறக்கடவுளெந்தையின் திருவடி வாரத்திலே ஸமர்ப்பித்தெடுத்துத் தட்டிலே வைத்துச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். வேதத்திற்கு ப்ரணவம் போலே, த்ராவிட வேதாநுஸந்தானத்திற்கு, இத்திருமந்திரமே முதலும் முடிவுமாகக் கடவதென்று, பெருமாளுடைய நியமனமும் பாங்காக வாய்த்தது.

பின்பு சிஷ்யர்களால்

"வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழும்"

என்று தொடங்கி, வாழித்திருநாமம் அரங்கநாதன் ஆணைப்படி, பணிக்கப்பட்டு அதனை அநுஸந்தித்தே எங்கும் அருளிச் செயல் சேவை தலைக்கட்டுக என்று நியமனமும் அவதரித்தாயிற்று.

பிறகு மாமுனிகளை, அழகிய மணவாளன் அருகில் அழைத்து, அநவதிகமான சிறப்புகளைத் தந்தருளி, கோயில் அனைத்து கொத்தும் ஸகல வரிசைகளுடனும், திருவீதி வலமாக(மாமுனிகளை) மடத்திலே எழுந்தருளப் பண்ணவித்து,

*க்ருதக்ருதயஸ் ததாராமோ விஜ்வர:ப்ரமுமோத ஹ*

என்கிற கணக்கிலே உள்ளம் பூரித்து க்ருதார்த்தனாய் விளங்கினான்.

---